भारत का राजपत्र

# The Gazette of India

இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

சிறப்பிதழ்

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्रधिकार प्राकाशित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது.

नई दिल्ली, सोमवार, 23 नवंबर, 1992/1914 शक

New Delhi, Monday, 23rd November 1992

புது தில்லி, 1992ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 23ஆம் தேதி, திங்கட்கிழமை

## Ministry of Law, Justice and Company Affairs

(Law Department)

New Delhi, the 23rd November 1992

*சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்*

*(சட்டத்துறை)*

*புது தில்லி, 23, நவம்பர் 1992*

The translation in Tamil of the Scheduled Castes and Scheduled Tribes (Prevention of Atrocities) Act, 1989 (33 of 1989), The All-India Services Act, 1951 (61 of 1951), The Dowri Prohibition Act, 1961 (28 of 1961), The explosive Substances Act, 1908 (6 of 1908), The President (Discharge of Functions) Act, 1969 (16 of 1969), The Government Savings Certificates Act, 1959 (46 of 1959), The Weekly Holidays Act, 1942 (18 of 1942) and The Hindu Adoptions and Maintenance Act, 1956 (78 of 1956) are hereby published under the authority of the President and shall be deemed to be the authorised translations thereof in Tamil under clause (*a*) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

*பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்புச்) சட்டம், 1989 (33/1989), அனைத்திந்தியப் பணிகள் சட்டம், 1951 (61/1951), மணக்கொடைத் தடுப்புச் சட்டம், 1961 (28/1961), வெடிபொருள்கள் சட்டம், 1908 (6/1908), குடியரசுத் தலைவர் (பதவிப் பணிகளை ஆற்றுதல்) சட்டம், 1969 (16/1969), அரசாங்கச் சேமிப்பு பத்திரங்கள் சட்டம், 1959 (46/1959), வார விடுமுறை நாட்கள் சட்டம், 1942 (18/1942) மற்றும் இந்து மகவேற்புகள் மற்றும் வாழ்க்கைப் பொருளுதவிச் சட்டம், 1956 (78/1956) ஆகியவற்றின் தமிழாக்கங்கள் குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன் மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973)இன் பிரிவு 2இன் கூறு (அ)–வின் கீழ் இவையே தமிழில் அதிகாரமுறை மொழிபெயர்ப்புகளாகக் கருதப்படுதல் வேண்டும்.*

# வெடிபொருள்கள் சட்டம், 1908.

(சட்ட எண் 6/1908)

[1908, ஜூன், 8.]

வெடிபொருள்கள் தொடர்பான சட்டத்தை மேலும் திருத்துவதற்கான சட்டம்.

குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் பொருந்துறுகை.

வெடிபொருள்கள் தொடர்பான சட்டத்தை, மேலும் திருத்துவது தேவையாக இருக்கிறது என்பதால், ஈங்கிதனால், பின்வருமாறு சட்டமியற்றப்படுகிறது :—

1. (1) இந்தச் சட்டம், வெடிபொருள்கள் சட்டம், 1908 என்று வழங்கப்பெறும்.

(2) இது, இந்தியா முழுவதையும் அளாவிநிற்கும் : மேலும் இந்தியாவுக்கு வெளியேயுள்ள இந்தியக் குடிமக்களுக்கும் பொருந்துறும்.

"வெடிபொருள்" என்பதன் பொருள் வரையறை.

2. இந்தச் சட்டத்தில், "வெடிபொருள்" என்னும் சொல், வெடி பொருள் எதனையும் செய்வதற்கான மூலப் பொருள்கள் எவற்றையும், வெடிபொருள் எதிலும் அல்லது விளைவு எதனைக் கொண்டும் வெடித்தல் எதனையும் விளைவிப்பதற்காக அல்லது விளைவிப்பதற்கு ஏதுவாகப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தக் கருதப்படும் அல்லது பொருத்தப்படும் செய்கருவி, பொறி, துணைக் கருவி அல்லது மூலப் பொருள் எதனையும் மற்றும் அத்தகைய செய்கருவி, பொறி அல்லது துணைக் கருவியின் பாகம் எதனையும் கூட உள்ளடக்குவதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

உயிருக்கோ சொத்திற்கோ ஆபத்து உண்டாக்கக் கூடிய வெடித்தலை விளைவிப்ப தற்குற்ற தண்டனை.

3. சட்ட விரோதமாகவும் வன்மத்துடனும் வெடிபொருளைக் கொண்டு உயிருக்கு ஆபத்து உண்டாக்கக்கூடிய அல்லது சொத்திற்குப் பெருங்கேடு விளைவிக்கக் கூடிய தன்மையுடைய ஒரு வெடித்தலை விளைவிக்கிற எவரொருவரும், உள்ளபடியே நபர் எவருக்கும் அல்லது சொத்து எதற்கும் அதனால் கேடு விளைவிக்கப்பட்டிருந்தாலும் இல்லையென்றாலும், ஆயுள் காலத்திற்கோ அதைவிடக் குறைந்த காலஅளவிற்கோ சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப் படுதல் வேண்டும் ; அத்துடன் பணத்தண்டமும் சேர்க்கப்படலாம் ; அல்லது, பத்தாண்டுகள்வரை நீடிக்கலாகும் ஒரு காலஅளவிற்குச் சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும் ; அதனுடன் பணத்தண்டமும் சேர்க்கப் படலாம்.

4. சட்ட விரோதமாகவும் வன்மத்துடனும்—

வெடித்தலை விளைவிக்க முயல்வதற் குற்ற அல்லது உயிருக்கு அல்லது சொத்திற்கு ஆபத்து உண்டாக்கும் உட்கருத்துடன் வெடிமருந்துப் பொருளைச் செய்வதற்குற்ற அல்லது வைத்திருப் பதற்குற்ற தண்டனை.

(அ) உயிருக்கு ஆபத்து உண்டாக்கக்கூடிய அல்லது சொத்திற்குப் பெருங்கேடு விளைவிக்கக்கூடிய தன்மையுடைய ஒரு வெடித்தலை இந்தியாவில் ஒரு வெடிபொருளைக் கொண்டு விளைவிக்கும் உட்கருத்துடன் செயல் எதனையும் செய்கிற அல்லது ஒரு வெடி பொருளைக் கொண்டு விளைவிக்கச் சதி செய்கிற, அல்லது

(ஆ) வெடிபொருள் எதனையும் கொண்டு இந்தியாவில் உயிருக்கு ஆபத்து உண்டாக்கும் அல்லது சொத்திற்குப் பெருங்கேடு விளைவிக்கும் அல்லது அதன் வழியாக இந்தியாவில் உயிருக்கு ஆபத்து உண்டாக்குவதற்கு அல்லது சொத்திற்குப் பெருங்கேடு விளைவிப்பதற்குப் பிறர் எவரையும் இயல்விக்கும் உட்கருத்துடன் அந்த வெடிபொருளைச் செய்கிற அல்லது தம் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் கொண்டிருக்கிற,

எவரொருவரும், வெடித்தல் எதுவும் நிகழ்ந்திருந்தாலும் இல்லையென் றாலும், உள்ளபடியே நபர் எவருக்கும் அல்லது சொத்து எதற்கும் கேடு விளைவிக்கப் பட்டிருந்தாலும் இல்லையென்றாலும், இருபதாண்டுகள் வரை நீடிக்கலாகும் ஆயுள்காலத்திற்குச் சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன் பணத்தண்டமும் சேர்க்கப்படலாம் ; அல்லது, ஏழாண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவிற்குச் சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப் படுதல் வேண்டும் ; அதனுடன் பணத்தண்டமும் சேர்க்கப்படலாம்.

ஐயப்பாடான சூழ்நிலைகளில் வெடிபொருள் களைச் செய்வ தற்குற்ற அல்லது உடைமையில் கொண்டிருப்ப தற்குற்ற தண்டனை.

5. எவரொருவரும் வெடிபொருள் எதனையும் தயாரிப்பது அல்லது அதை அறிந்தே தம் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் கொண்டிருப்பது ஒரு சட்டப் படியான நோக்கத்திற்காக அல்ல என்கிற நியாயமான ஐயப்பாடு எழுவதற்கு இடமளிக்கும் சூழ்நிலைகளில் அதை அவர் தயாரிப்பாராயின் அல்லது அறிந்தே தம் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் கொண்டிருப்பாராயின், அவர், சட்டப் படியான ஒரு நோக்கத்திற்காகவே தாம் அதைத் தயாரித்ததாகவோ தம் உடைமை யில் அல்லது கட்டுப்பாட்டில் கொண்டிருந்ததாகவோ மெய்ப்பித்துக் காட்டினா லன்றி, அவர் பதினான்கு ஆண்டுகள்வரை நீடிக்கலாகும் ஆயுள்காலத்திற்குச் சிறைத்

தண்டனை விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவராவார்; அத்துடன் பணத்தண்டமும் சேர்க்கப்படலாம், அல்லது ஐந்தாண்டுகள்வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவிற்குச் சிறைத் தண்டனை விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும் ; அதனுடன் பணத்தண்டமும் சேர்க்கப்படலாம்.

**குற்ற உடந்தையர்களுக்கு உற்ற தண்டனை.**

6. பணத்தைக் கொடுத்தல், பணத்திற்காக ஈர்த்து வேண்டுதல், வளாகத்தினை அளித்தல் அல்லது மூலப் பொருள்களைக் கொடுத்தல் வாயிலாக அல்லது பிற எந்த வழியிலேனும் இந்தச் சட்டத்தின்படியான குற்றச்செயல் எதனையும் செய்வதற்கு வழிவகை செய்கிற, யோசனை கூறுகிற, உதவி செய்கிற, உடந்தையாயிருக்கிற அல்லது அதற்குத் துணையாக இருக்கிற எவரொருவரும், அக்குற்றச் செயலுக்காக வகை செய்யப்பட்டுள்ள தண்டனை விதித்துத் தண்டிக்கப் படுதல் வேண்டும்.

**குற்றச்செயல்களுக்கான விசாரணைக்குள்ள வரைத் தடை.**

7. நீதிமன்றம் எதுவும், மைய அரசாங்கத்தின் இசைவுடன் அல்லாமல், இந்தச் சட்டத்திற்கெதிரான ஒரு குற்றச் செயலுக்காக எவரொருவரையும் விசாரணை செய்ய முற்படுதல் ஆகாது.